விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்;

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 13 சனிக்கிழமை (29-09-2001) தொலைபேசி 3378 ஒலி 292

### யுத்தத்திற்கு முடிவு கட்டுவது அவசியம்

# அரசு - புலிகளுடன் பேசி எடுக்கும் தீர்வை ஐ. தே. கட்சி ஆதரிக்கும்!

## கட்சியின் தலைவர்கள் அமைச்சர்களுக்குக் கடிதம்

(சிறப்பு நிருபர்)

**அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே தொடரும் யுத்தத்திற்கு முடிவுகட்டி, இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையேஏற்படும் எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் ஐக்கிய தேசியக் கட்சி தனது பூரண ஆதரவை வழங்க தயாராகவுள்ளதாகத் தெரிவித்து கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய அமைச்சர்களுக்குக்கடிதம் அனுப்பிவைத்துள்ளனர்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் கருஜெயசூரியா கட்சியின் சட்டத்துறை வல்லுனர் கே; என். சொக்ஸி, டிரோன் பெர்னாண்டோ புள்ளே, கட்சியின் தவிசாளர் சரித்ரத்வத்த ஆகியோரே இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் விடுதலைப் புலிகளுடன் பேசி எடுக்கும் எந்தவொரு முடிவுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தயார் என்று கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்;

இவர்களின் இக் கடிதம் பொதுஜன ஐக்கிய முன்னணி அமைச்சர்களான டி.எம்.ஜயரத்தினா, லக்ஷ்மன் கதிர்காமர், ஜெனரல் அநுருத்தரத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## டாக்டர் ஜயலத் நேற்று வன்னி விஜயம்

### மருத்துவமுகாம்நடத்துவார்

ஐக்கிய தேசியக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா மீண்டும் நேற்று இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னி பகுதிக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்

10 பேர்கொண்ட வைத்தியர்கள் குழுவுடன் வன்னி செல்லும் இவர். மூன்று நாட்கள் தங்கியிருந்து மருத்துவ முகாம்களை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிது;

தனது வன்னிப்பயணம் குறித்துஜயலத்எம்.பி, தெரிவிக்கையில்இம்முறையும்பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொண்டே வன்னி செல்கின்றேன் அங்கு எனது மனிதாபிமானப் பணிகளை முன்னெடுக்கும் வகையில் பார்வைகுறைந்த மக்களுக்கு 1500மூக்குக் கண்ணாடிகள் பெருந்தொகையான மருந்

(08ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி பங்குபற்றவில்லை

(கொழும்பு)

தற்போதைய அரசியல்நிலவரம் குறித்து ஆராய்வதற்காக நேற்று முன்தினம் கூட்டப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கலந்து கொள்ளவில்லை;

நேற்று முன்தினம் மாலை 7; 15மணிக்கு ஆரம்பமான இக் கூட்டத்தில் ஜனாதிபதி கலந்து கொள்ளாததால் முக்கிய முடிவுகள் எதுவும் எடுக்கப்படாத நிலையில்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது;

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் விவசாயி

(08ஆம் பக்கம் பார்க்க)

## பாக்கியநாதன் இடைநிறுத்தம்

(கொழும்பு)

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வே. மு. பாக்கியநாதன் தலைவர் பதவியில் இருந்தும்இடைநிறுத்தம்செய்யப்பட்டுளளார்,

(08ம் பக்கம் பார்க்க

## அமெரிக்காவிடம்இருந்து 25மில்லியனை கடன்பெற அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு சமூக அபிவிருத்தித் திட்டத்திற்கென ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 25 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாகப் பெறுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந் நிதியில் ஒருபகுதி வடக்கு கிழக்கில் அரசினால் முனெடுக்கப்படும் புனரமைப்புத்திட்டம் மற்றும் நிவாரணம் வழங்குதல் என்பனவற்றிற்கு பயன்படுத்தப் படவுள்ளது.

இதேவேளை டென்மார்க் நோர்வே சுவீடன் போன்ற நாடுகளுக்கு புதிய விமான சேவைகளை ஆரம்பிப்பதற்கான அனுமதியையும் அமைச்சரவை வழங்கியுள்ளது.

(ந-5)

## பஸீரை விலக்கியது செல்லுபடியற்றது!

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

தேசிய ஐக்கியமுன்னணி பாராளுமன்ற உறுப்பினர் சேகுதாவுத்பஸீரை ஐக்கிய முன்னணியில் இருந்துநீக்கியமை செல்லுபடியாகாதுஎன்று கொழும்பு உயர்நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது;

சிறிலங்காமுஸ்லிம் காங்கிரஸ்,மற்றும் தேசியஐக்கிய முன்னணியும் பிளவுபட்டதை தொடர்ந்து சேகுதாவுத்பஸீர் எம்;பி முஸ்லிம்காங்கிரசின் ரவூப்ஹக்கீம் அணியில் இணைந்தசர் இதனை அடுத்து அவர்தேசிய ஐக்கிய முன்னணியில் இருந்து நீக்கப் பட்டுள்ளதாக. கட்சியின் தலைவி பேரியல் அஷ்ரப்

[08ஆம் பக்கம் பார்க்க]

## விமானநிலையங்கள் மீது தாக்குதல் நடத்தும் சாத்தியக்கூறுகள் உண்டு

### இலங்கைக்கு ஐ.சி.ஏ.ஓ எச்சரிக்கை

(கொழும்பு

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டால்,அதனை எதிர்கொண்டு முறியடிக்க பொருத்தமான நடவடிக்கைகள் முன்னரே எடுக்கப்படவேண்டும்;

இவ்வாறு சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு[I C A O]இலங்கை அரசுக்கு ஆலோசனைவழங்கி உள்ளது.

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம்தாக்கி அழிக்கப்பட்டமையை அடுத்து, விமான நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாக அச்சம் கொண்டுள்ள மேற்படி அமைப்பு, விமான நிலையங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசைக் கோரியுள்ளது.

விமான நிலையங்களின் பாதுகாப்பு குறித்தும் அதன் பாதுகாப்புஏற்பாடுகள் பற்றியும் தொடர்ச்சியாக மீளாய்வு நடத்தப்பட வேண்டுமெனவும்,விமான நிலையத்திலிருந்து கண்ணுக்கெட்டிய தூரம்வரைக்கும் பலத்த

(08ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு

## ஐ. தே. கட்சியின் ஆதரவைப் பெற அமைச்சர் மங்கள மீண்டும் முயற்சி

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எதிர்க் கட்சிகளை ஒரு உடன்பாட்டிற்குக் கொண்டு வரும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீரா தெரிவித்துள்ளார்;

விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியை ஒரு வழிக்குக் கொண்டு வருவதில் அமைச்சர் மங்கள சமரவீரா தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதவியை நாடியுள்ளார்;

இதன் ஒரு கட்டமாக நேற்றுகூட்டணியின்சிரேஷ்ட உபதலைவர் வீ; ஆனந்தசங்கரியைச் அமைச்சர் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார். (வ)

## அமைச்சர் டக்ளஸை சந்திக்கஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழும் மக்கள் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேசுவதற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு அமைய ஒவ்வொரு வாரத்திலும்செவ்வாய்,வியாழன் வெள்ளிக்கிழமைகளில் பொதுமக்கள் தத்தம் பொதுப் பிரச்சினைகள் தொடர்பாகவும் தனிப்பட்ட பிரச்சினைகள்தொடர்பகவும் அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாட முடியும் திங்கள்கிழமைகளில் அதிகாரிகள் தத்தம்ஆலுவல கரீதியான விடயங்களுக்காகத் தொடர்பு கொண்டு கலந்துரையாடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## சிறு விளம்பரம்


### O/L கணிதம்

புதிய, பழைய பாடத்திட்டத்திற்கமைய கணிதபாடத்தின் பெரும்பிரிவுகளான அட்சரகணிதம், கேத்திரகணிதம், எண்கணிதம், புதியகணிதம், ஆகியவற்றின்சகல அலகுகளையும் ஆரம்ப அறிவிலிருந்து 20நாட்களில் 40மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். தொடர்பு: க.ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி.

(3596)

### கடைகள் விற்பனைக்கு

கதிரேசன் கோவிலடி K.K.S வீதியில் நகைக் கடைக்கு உகந்த (10×30) சதுரடியைக் கொண்ட கடையும் பெரியகடை வீதியில் (மலயான் கபே வீதி) நல்ல வியாபாரம் செய்யக் கூடியதுமான புடைவைக் கடைக்கு உகந்த (14×40) சதுரடியைக் கொண்ட கடையும் விற்பனைக்கு உண்டு. (தொடர்பு கொள்ள T.P யினையும் குறிப்பிடவும்.) விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விளம்பர இல: 226 மே/பா வலம்புரி, யாழ்ப்பாணம்.

(3586)


## சான்றிதழ் வழங்கல்

(புலோலி)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின்வடமராட்சி உபநிலையத்தில் நடைபெற்றமுன்பள்ளி ஆசிரியர் பயிற்சிநெறி சான்றிதழ் வழங்கும் விழாவும், புதிய முன்பள்ளி பயிற்சிநெறி ஆரம்பவிழாவும் நாளை பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகவணிக முகாமைத்துவ பீடாதிபதி எம். நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிலே யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் சட்டத்தரணி ஆர். உருத்திரா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-52)

## வர்த்தகருக்கு அபராதம்

(மந்திகை)

பருத்தித்துறை நகர வர்த்தக நிலைய மொன்றில் காலாவதியான உணவுப் பொருட்களை விற்ற, வர்த்தக நிலைய உரிமையாளரை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் 750 ரூபா அபராதமும், பரமானந்த ஆச்சிரமத்திற்கு 250 ரூபா அறக்கொடையும் செலுத்துமாறு தீர்ப்பளித்துள்ளது.

(உ-23)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பொதுப் பட்டமளிப்பு விழா 2001

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 2001-10-06 ஆம் திகதி ஐந்து அமர்வுகளில் நடைபெறும்.

இப் பட்டமளிப்புவிழாவில்நேரடியாகப் பட்டம் பெறுவோருக்கு 3-10-2001, 4-10-2001 ஆகிய திகதிகளில் காலை 9.30-12.00 மணி வரையும் மாலை 1.30-3.30 மணி வரையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக் கிளையில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும்.

பட்டமளிப்பு விழாவில் புகைப்படம் எடுப்பதற்கான கட்டணமாக ரூபா 35/- ஐ (போட்டோ ஒன்றுக்கு) பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்திய பற்றுச் சீட்டினைச் சமர்ப்பித்து பட்டமளிப்பு விழா அங்கிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(C-2655)



### நன்றியுடன் வாழ்த்துகிறோம்



எமது பாடசாலையின் புனரமைப்புக்கு நிதி உதவி வழங்கிய

மாண்பு மிகு அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான

**K. N. டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும்

கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்

**கே. வி. குகேந்திரன்**

அவர்களுக்கும்

ஈ.பி.டி.பியின் யாழ்ப்பாணக் கட்சி அமைப்பாளர்

திருவாளர் **றி. றேகன்** அவர்களுக்கும்

திருவாளர்

**சி. மனோகரன் (கேதீஸ்)**

அவர்களுக்கும்

எமது நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

யா/ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய பாடசாலைச்சமூகம்

(3600)


## இங்கிலாந்து பிரமுகர்களால் மணிக்கூட்டு கோபுரம் நவம்பரில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது புனரமைக்கப்பட்டு வரும் யாழ். மணிக்கூட்டுக் கோபுரம நவம்பர் மாதப் பிற்பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு அது குறித்து திடமான திகதியை அறிவிக்க முடியாதிருப்பதாக நேற்று இடம் பெற்ற யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் மாநகர முதல்வர் என்.ரவிராஜ் தெரிவித்தார்.

மேற்படி மணிக் கூட்டுக் கோபுரத்திற்குப் பொருத்துவதற்கென இங்கிலாந்து அரசினால் ஏற்கனவே வழங்கப்பட்ட 4 மணிக் கூடுகளையும் யாழ்ப்பாணம் எடுத்து வருதல், மற்றும் அவற்றைப் பொருத்துதல் பணிகளையும் இங்கிலாந்து அரசே மேற்கொள்ளவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தவிர, இம் மணிக்கூட்டுக் கோபுரத் திறப்பு விழாவிற்கு இங்கிலாந்து நாட்டின் முக்கிய பிரமுகர்களும் அழைக்கப்படவுள்ளனர்.

(உ-10-19)

## பதிவு செய்யப்படாத வெதுப்பகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைஎல்லைக்குள், அனுமதி பெறாமல் இயங்கும் வெதுப்பகங்களுக்கு எதிராக நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இது குறித்த தீர்மானம், நேற்றைய தினம் யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாநகரசபையின் அனுமதி பெற்று இயங்குமாறு பல முறை வற்புறுத்திக் கூறியும், அதனைப் பொருட்படுத்தாது மிகுந்த சுகாதாரச் சீர்கேட்டுடன் 21 வெதுப்பகங்கள் இப் பகுதியில் இயங்குவதாகவும்,

இவற்றுக் கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதன்மூலம் பொதுமக்கள் பாதிக்கப்படுவது உண்மையாயினும், அவர்களது சுகாதாரம் பேணப்பட வேண்டியதை முதன்மைப் படுத்தி இந் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளதாகவும் இக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

(உ-10-19)


### புதிய நூல் அறிமுகம்

**'சுவாமி விவேகானந்தர் விழைந்த மனிதகுலத் தொண்டு'**

எனும் நூல் விற்பனைக்கு உண்டு.

30.09.2001. 01.10.2001 ஆகிய இருதினங்களில் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் முன்புறத்தில் அமைந்துள்ள;

விசேட புத்தக நிலையத்தில்

பெற்றுக் கொள்ளலாம்:

சப்பறம், தேர்த்திருவிழா அன்று சமய நூல்கள் விற்கப்படும். இலவச இணைப்புக்களும் உண்டு.

செயலாளர்

ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம். பருத்தித்துறை.

(C/2656)



### திருமறைக் கலாமன்றம் நடத்தும்

**கலை நிலா அரங்கு**

(மாதாந்த அரங்க நிகழ்வு)

காலம்: **நாளை (30- 09- 2001)** ஞாயிற்றுக்கிழமை

நேரம்: **மாலை 7. 00 மணி**

இடம் : **மன்ற அரங்கு**

நிகழ்ச்சிகள்

★ கும்மி

★ குறத்தி நடனம்

★ கோலாட்டம்

★ தனிப்பாடல்

சிறப்பு நிகழ்ச்சி

புனித பத்திரிசியார் கல்லூரி வழங்கும்

**மன்னிப்பு (கூத்து)**

● பிரவேசம் இலவசம் ●

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமறைக் கலாமன்றம்

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலை பேசி: 2393

(C-2657)


## கலை விழாவும் கலைஞர் கௌரவிப்பும்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் குருநகர் இளைஞர் கலைக் கழகம் நடத்தும் கலைவிழா இன்று மாலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

குருநகர் கலையரங்கில் நடைபெறும் இவ் விழாவில் கவியரங்கு, நடனம், இசைக் கச்சேரி, நாடகம் ஆகியன இடம் பெறும்.

இன்று, மறைந்த குருநகர் கிராம சேவகர் றோமன் அன்ரனி ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளதுடன், கலைஞர்கள்சிலரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(உ-59)

## அதிபர்களுக்கு செயலமர்வு

[மந்திகை]

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில்தரம் 6-இல் கற்கும் மாணவர்களுக்குநடத்தப் படவுள்ள மொழித்திறன் செயற்திட்டம் தொடர்பான அதிபர்களுக்கானசெயலமர்வு இன்று காலை 8.00 மணிக்கு நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களைத் தவறாது இச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார்.

இம்மொழித்திறன் செயற்றிட்டம் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(செ-23)

## 'இந்து சாதனம்' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையினரால் வெளியிடப்படும் 'இந்து சாதனம்' ஆவணிமாத இதழ் வெளியிடப்பட்டுள்ளது.

(செ)

## ஆஸ்பத்திரியை தரமுயர்த்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை செல்லும் நோயாளர்களின் வசதி கருதி மேலதிக சிகிச்சைப் பிரிவுகளை அங்கு ஆரம்பிக்கவும், மாவட்ட வைத்தியசாலையாக உயர்த்தவும் ஏற்றவகையில், அதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை உடன் விடுவித்து, அங்கு கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்கு, உரிய காரியாலயத்தினைப் பணிக்குமாறு வலிகிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ குணசிங்கம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கோரியுள்ளார்.

[உ]

## லயன்ஸ் சுகாதார தினம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்லயன்ஸ் கழகத்தின் லயன்ஸ் சுகாதார தினம் கடந்த செவ்வாய்க்கிழமை யா நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் மாவட்டத் தலைவர் டாக்டர் எஸ் எஸ். அருளானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

டாக்டர் கே. லோகநாதன் தலைமையில் வித்தியாலய மாணவர்களுக்கு இலவச மருத்துவ சோதனை முகாமும் நடைபெற்றது.

(உ-106)

**திறனாய்வுக்களம்**

# வலி.கலை நிகழ்வில் ஸ்ரீதர்சனனின் சனரஞ்சகமான சங்கீத ஆலாபனை

வலி. தெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் பௌர்ணமி கலைநிகழ்ச்சி அண்மையில் யாழ் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் "வலி. தெற்குப் பிரதேச செயலர் க. தேவிஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

**சாரீரம் பாணியும்**

அன்றைய விசேட நிகழ்ச்சியாக ஸ்ரீ தர்சனன், உதவி விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம், நுண்கலைப் பீடம் இசைப் பகுதியின் இசைக் கச்சேரி இடம்பெற்றது. ஒரு தரமான இசைக்கச்சேரி கேட்ட திருப்தி மனதில் ஏற்பட்டது. 'பம்பா கணபதி' என்ற இராகமாலிகையுடன் ஆரம்பித்த கச்சேரி, ஆரம்பத்திலேயே களை கட்டி விட்டது. கனதியான, வசதியான சுருதியை சிக்கெனக் கெளிப்பிடித்துக் கொள்ளும் சாரீரம்; இருந்து பாடும் பாணி எனது குரு இசைப் புலவர் என். சண்முகரட்ணத்தை ஞாபகப்படுத்தியது. அதேபாணி வாயைத்தவிர உடலில் எந்த அசைவோ அங்க சேட்டைகளோ இலையாது. இதற்கு முதலில் ஒரு 'சபாஷ்' போடவேண்டும்.

**ஆலாபனை**

அமிர்தவர்ஷணி இராகம் விஸ்தாரமான ஆலாபனைக்கு

**ஞா. சிவநேசன்**

இடங் கொடாத இராகம். ஆயினும் பாடகரின் இராக ஆலாபனை அதன் ஸ்வரூபம் புலப்படக் கூடியதாக அமைந்தது. கற்பனாஸ்வரம் ஒரு சில ஆவர்த்தங்கள் பாடியது போதும் கச்சிதமாக அமைந்தது. அடுக்கடுக்காக நீண்ட மோறாக்கள் ததிங்கிணதோம்களையும் போட்டு இரசிகர்களை, 'ரென்சனில்' வைத்திருக்காமல் சிறிய சனரஞ்சகப் பிரயோகங்களில் பாடியது வரவேற்கத்தக்கது. கவிஞர் துரைசிங்கம் அவர்களின் வாய்க்கால் என்ற யமன் கல்யாணி கீர்த்தனை மிகவும் இரசிக்கக் கூடியதாக இருந்தது. பாடகரே இசை அமைத்துப் பாடியிருக்கிறார் போலிருக்கிறது. அவர் அப் பாடலை மிகவும் இரசித்துப் பாடினார். கச்சேரியில் ஒரு விசேட தன்மை என்ன வென்றால் எல்லா வகையான இரசிகர்களையும் திருப்திப்படுத்தக் கூடியதாக அமைந்ததே யாகும். பொதுவாக நோக்கில் ஸ்ரீ தர்சனனின் கச்சேரி ஒரு ஜனரஞ்சகமான கச்சேரியாக மென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

**நெல்லியடி**

## பஸ்தரிப்பு நிலையத்தில் மழைநீரால் மக்கள் சிரமம்

(வல்வெட்டித்துறை)

நெல்லியடி பஸ் தரிப்பு நிலையத்தில் பாரிய குண்டும் குழியும் காணப்படுவதனால் பஸ் நிலையத்திற்கு வரும் வாகனங்களும், பொதுமக்களும் பெருஞ்சிரமத்தினை எதிர்நோக்குகின்றனர்.

தற்போது மழைகாலம் ஆரம்பித்து விட்டபடியால் இப்பள்ளங்களில் தேங்கிநிற்கும் மழைநீர் வாகனங்கள் நகர்ந்து செல்லும்போது பயணிகள்மீது ஏற்படுத்துகின்றன எனவும் பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றன. (செ-217)

## யாழ்ப்பாணக் கல்லூரி அணி சம்பியனானது

(சண்டுக்குளி)

சண்டிலிப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 12 வயதுக்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட அரை இறுதி ஆட்டம் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்றது.

இறுதிப் போட்டிகளின் பெறுபேறுகள் வருமாறு.

சுழிபுரம் ஐக்கிய வித்தியாலைய அணிக்கும்யாழ் வட்டுக் கல்லூரி அணிக்கும் இடையிலான 3ஆம இடத்துக்கான ஆட்டத்தில் சுழிபுரம் ஐக்கிய வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இறுதியாட்டத்தில் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி அணி சரஸ்வதி வித்தியாலய அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியன் ஆனது.

இவ்வட்டாரங்களுக்கு மத்தியஸ்தர்களாக சி எ. அரவிந்தன், கே. சிவகுமார்எஸ். ராஜ்குமார் ஆகியோர் கடமையாற்றினர். (உ-110)

**கசிப்பு உற்பத்தி**

## அதிகரிப்பு

(வல்வெட்டித்துறை)

கொக்குவில் ரயில் நிலையப் பகுதி, பிறவுண் றோட்யாழ். பல்கலைக்கழக பாலசிங்கம் விடுதி பின்பகுதி, கொக்குவில் இந்துமயான வீதி, ஆகிய இடங்களில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துக்காணப் படுகிறது.

இங்கு பகல் வேளைகளிலும் வெளிப்படையாக கசிப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இது தொடர்பாக சம்பந்தப் பட்டவர்கள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது தொடர்பாகமக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

(செ- 217)

**நம்பிக்கையில்லாப்**

# பிரேரணை சமர்ப்பிக்கப் படுமானால் நாடாளுமன்றைகலைக்கயோசனை

(கொழும்பு)

அரசுக்கெதிராக ஐ. தே. கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிக்குமானால் பாராளுமன்றத்தைக் கலைத்துவிடுவது பற்றி பொ. ஐ. முன்னணித் தலைவர்கள் ஆலோசித்து வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, சுதந்திரக் கட்சியின் கிளைகளையும் அமைப்புக்களையும் பலப்படுத்தும் பணிகளை செய்யுமாறு ஜனாதிபதி கட்சியின் அமைப்பாளர்களைப் பணித்துள்ளார்.

தேர்தல் ஒன்று நடைபெறும் பட்சத்தில் பிரசார வேலைகளை முன்னின்று நடத்துவதற்கு ஜே வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க நாடுதிரும்பவுள்ளார் என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, தேர்தல் ஜனவரியில் நடைபெறலாம்என்று அரசியல் வட்டாரங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன.

(ந)

## ஆசிரியர் செயலமர்வு

(மந்திகை)

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் தரம்8, 11க்கு சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ- 23)

## பாதிப்புற்ற வடமராட்சி மீனவர் மேம்பாட்டுக்கு பரு.திருச்சபை பாடுபடும்

[மந்திகை]

பாதிக்கப்பட்ட வடமராட்சிப்பகுதி மீனவர்களுக்கு உணவுப் பொதிகள் மற்றும் உதவு தொகை வழங்கி அவர்களின் வாழ்வை மேம்படுத்த தென்னிந்திய திருச்சபையின் பருத்தித்துறை பங்குத்தந்தை முன்வந்துள்ளார்.

திருச்சபையின் உயர் மட்டத்துடன் இது தொடர்பாக தான் தொடபுர்கொண்டிருப்பதாகவும்,

விரைவில் அவர்களின் வாழ்வை மேம்படுத்தும் திட்டம் அமுல்படுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-23)

## மல்லாகம் நீதிவான் நலன்புரி நிலைய மக்கள் வேறிடத்திற்கு மாற்றம்

(ஏழாலை)

மல்லாகம நீதிவான் இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த 21 குடும்பங்கள் தற்பொழுது மல்லாகம் கோணப்புலம் நலன்புரி நிலையத்திற்கு இடம் மாறியுள்ளன.

காங்கேசன்துறை மயிலிட்டி, தையிட்டி ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்களே நீதிவான் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்தனர்.

நீதிவான்நலன்புரி நிலையம் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியிலேயே அமைந்திருந்தது.

தற்பொழுது அக்காணிச் சொந்தக்காரர் தமக்கு காணி தேவைப்படுவதாக் கூறியமையை அடுத்தே அங்கு தங்கியிருந்த குடும்பங்கள் கோணப்புலம் நலன்புரி நிலையத்திற்கு இடம் மாறியுளளன.

(செ-12)

## சோதனை சாவடியால் சிரமம்

[வல்வெட்டித்துறை]

இருபாலை இழக்கில் யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில புதியசோதனைச் சாவடி ஒன்று அமைக்கப்பட்டுமக்கள் தீவிரமாக சோதனைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

இவ் வீதி மிகவும் சிறியதாகவும அருகில் பாலதத்துடனும் காணப்படுகிறது இதனால் சாரதிகள் சிரமததின மத்தியில் வாகனங்களை செலுத்த வேண்டியுளளதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-217]

## பதுங்கு நிலை காவல் நடவடிக்கையின் போது படையினர்புலிகள்மோதல்

(மட்டக்களப்பு)

காத்தான்குடி கடற்கரைப் பிரதேசத்தில் மறைந்திருந்த படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்ட மோதலில் படையினர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து பதுங்கு நிலை காவல் நடவடிக்கை மேற்கொண்டபோதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த படைவீரர் மட்டகளப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (உ-4)

**உதைபந்தாட்டம்**

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கோட்ட மட்டத்தில் இடம்பெற்று வரும் உதைபந்தாட்ட போட்டித் தொடரில் இன்றைய தினம் காலை 8. 30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில்;

16 வயதுப் பிரிவில் யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும் எதிர் யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயமும்;

யா/ இந்துக் கல்லூரி எதிர் யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன.

18 வயதுப் பிரிவில்; யா/ இந்துக்கல்லுரி எதிர் யா/ கோண்டாவில் இந்துமகா வித்தியாலயமும் மோதவுள்ளன. (உ-106)

## தென்மராட்சி கல்வி வலயத்தை சேர்ந்த 58,ஆசிரியர்கள்மீளஅழைப்பு

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலயத்தில் ஆசிரியர்களாகக் கடமையாற்றி, இடப்பெயர்வின் பின்னர் யாழ்ப்பாண கல்வி வலயப் பாடசாலைகளுடன் தற்காலிகமாக இணைந்து செயற்பட்ட 58 ஆசிரியர்கள் மீண்டும் உடனடியாக தென்மராட்சிவலயத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகள் மீண்டும் இயங்க ஆரம்பமாகியதையும், அங்கு நிலவிய ஆசிரியர் பற்றாக்குறையையும கருத்திற் கொண்டே இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஏனைய வலயப் பாடசாலைகளில் தற்காலிகமாக இணைந்து கடமையாற்றும்தென்மராட்சிவலயப் பாடசாலை ஆசிரியர்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பாக நிரந்தரப் பாடசாலைகளில் இணையுமாறு அறிவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-23)

## செய்முறைப் பரீட்சை

(மந்திகை)

வரணி மகாவித்தியாலயத்தில் இவ் வருடம் க. பொ. த. (சா. த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு சங்கீதம், விவசாயம், மனையியல் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சை ஒக்டோபர் 1 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அதிபர் அறிவித்துள்ளார்.

(செ-23)

## முகாம்களில் வாழ்வோர் மழை கண்டு ஏக்கம்

(வல்வெட்டித்துறை)

கரணவாய் மத்தி பொன்னம்பலம் வித்தியாலய சூழலில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களின் அனைத்துக் கூரைகளும் சிதைந்த நிலையில் உள்ளன.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால தாங்கள மிகவும் கஷ்டமான வாழ்க்கையை எதிர்நோக்கியுள்ளதாக மேற்படி முகாம்களில் உள்ள மக்கள் தங்கள்வேதனையைத் தெரிவித்தனர்.

அன்றாடம் கஷ்டப்பட்டு உழைக்கும்சிறு வருமானத்தில் தாம் வாழ்க்கையை நடத்தி வருவதாகவும் கூரைகளைப் புதிதாக அமைக்கக்கூடிய வசதிகள் இல்லாதிருப்பதாகவும்தெரிவித்த அவர்கள் தமது நிலை குறித்து அரசியல் தலைவர்கள், தொண்டர் நிறுவனங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் மழைகாலத்தில் பாடசாலைகளிலே தான் ஒதுக்கிடம் தேட வேண்டிய நிலை ஏற்படும் என்று தமது ஏக்கத்தை மேலும் விபரித்தார்கள்.

(எ-172)

**சுகவாழ்வு**

உங்களை எச். ஐ. வி தொற்று! எய்ட்ஸ்ஸிலிருந்து காத்துக் கொள்ள சரியாகவும் தொடர்ந்தும் ஆணுறையைப் (Condom) பாவியுங்கள். (எய்டஸ்- வருமுன் காப்போம்.)

தரிசனம்

# செய்தித் துளிகள்

## ஆலயம் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய புனரமைப்பு பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

(உ-223)

## விதை நெல் பெறுவதில் சிரமம்

(கொழும்புத்துறை)

தற்போது பருவமழைஆரம்பித்துள்ளதையடுத்துவிவசாயிகள் நெல்விதைப்பில் மும்முரமாஈடுபட்டுவருகின்றபோதிலும் விதை நெல்லைப் பெற்றுக் கொள்வதில் பெரிய இன்னல்களைஎதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[உ-223]

## மிதிவெடி அகற்றும் பணி ஆரம்பம்

(ஏழாலை)

மல்லாகம் பகுதியில் மிதிவெடி அகற்றும்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலங்களில் இப்பகுதியில் மிதிவெடியில் சிக்குவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனையடுத்தே படையினரால் இப்பகுதியில் மிதிவெடி அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(செ-12)

## நிவாரணத்தை பெறுக

(கொழும்புத்துறை)

இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற செப்ரெம்பர் மாதத்திற்கான நிவாரணப் பொருட்களை எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

(உ-223)

## கட்டாயக் கல்வி விழிப்புணர்வு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மகாவித்தியாலயம், சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கடந்த 24 ஆம் திகதி கட்டாயக் கல்வி பிரசார நிகழ்வு நடைபெற்றது.

நெடுந்தீவு அபிவிருத்தித் தொண்டர்களினால்முன்னெடுக்கப்பட்ட இந் நிகழ்வில் கவிதை, நாடகம், பாடல், விவாத அரங்கு, பேச்சு ஆகிய நிகழ்வுகளின் மூலம் கல்வி பற்றியவிழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

[செ-82)

## சேவைநலன் பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் இளைப்பாறிய அதிபர் செ. விநாயகமூர்த்திக்கு சேவை நலன் பாராட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் சீ. சிவநேசன் தலைமையில் மேற்படி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (செ)

## புதிய பாடம் அறிமுகம்

(வல்வெட்டித்துறை)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தில் 2001/2002 கல்வியாண்டிலிருந்து, 1 ஆம் வருட மாணவர்களுக்கு புதிதாக மானிடவியல பாடம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

(செ-217)

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

இன்று பிற்பகல் 3 00 மணிக்கு பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் அமெரிக்காமீதான செப்ரெம்பர்-11 தாக்குதல்களும்அதன் தாக்கங்களும் என்ற தலைப்பில் கருத்துரை இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மேற்படி விடயம்தொடர்பாக கருத்துரை வழங்கவுள்ளார்.

[உ]

## போட்டி நடத்த ஏற்பாடு

(நல்லூர்)

புளியங்கூடல் ஸ்ரீ மகாமாரியம்மன் தேவஸ்தான அன்னதான மண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் 'திருமுறைப் பண்ணிசை வகுப்பு' மாணவர்களிடையே, எதிர்வரும் நவராத்திரிவிழாவினை முன்னிட்டு, 'சகலகலாவல்லி மாலைப் பாடல்' போட்டி நடத்தப்படவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை வகுப்பின் அமைப்பாளர் முத்துக் கிருஷ்ணன் மேற்கொண்டுள்ளார்.

(செ-103)

## சங்கத் தலைவர் விடுதலை

[வவுனியா]

புலிகளுக்கு நிதியுதவி செய்தார்களென்ற சந்தேகத்தின் பேரில் கடந்த 13 ஆம் திகதி கைது செய்யப்பட்ட மன்னார் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் உட்பட நால்வரை மன்னார் மாவட்டநீதிபதி எம். எச். எம். அஸ்மீ நேற்று முன்தினம் விடுதலை செய்தார்.

இவர் கைது செய்யப்பட்டமைக்கானசான்றுகள்போதியதாக இல்லாமையினால் அவர் விடுதலை செய்யப்படுவதாக நீதிபதி தெரிவித்தார். (ந 4)

## வீட்டிலிருந்து கிளைமோர் மீட்பு

(மட்டக்களப்பு)

மொறக்கொட்டாஞ்சேனைப் பகுதியில் இராணுவத்தினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று முன்தினம் வீடொன்றினைச் சோதனையிட்டபோது அங்கிருந்து இரு கிளைமோர் கண்ணிவெடிகளை தாம் மீட்டுள்ளதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மொறக்கொட்டாஞ்சேனைப் பகுதியைச்சேர்ந்த கண்ணதாசன் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ந-4)

## மாணவன் விடுதலை

(வவுனியா)

வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் தங்கவடிவேல் இன்பகரன் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை படையினரால் கைதுசெய்யப்பட்ட தங்கவடிவேல் இன்பகரன் கட்டுநாயக்க விமானத்தளத்தாக்குதல் சம்பந்தமாக கொழும்பில் வைத்து விசாரிக்கப்பட்டு வந்தார்.

இவரது கைது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு புகார் செய்யப்பட்டதை அடுத்து பயங்கரவாத ஒழிப்புப் பொலிஸார் மனித உரிமைகள் ஆணைக் குழு மூலமாக அவரது பெற்றோர்களிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

[வ]

# வடமராட்சிப் பகுதி மீனவர்களுக்கு இரட்டித்த நிவாரணம் விரைவில்

## பதிவு வேலைகள் மும்முரம்

(மந்திகை)

வடமராட்சி கடற்றொழிலாளர்களுக்கு, விதிக்கப்பட்ட தொழில் தடையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரட்டித்த நிவாரணம் வழங்கும் திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்தும் வகையில் அவர்களின் பெயர், விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கப் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி விபரம் சேகரிப்புப் பணியில். கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதி நிதிகள், கிராம சேவையாளர்கள், கடற்றொழில் பரிசோதகர்கள் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத்திற்குட்பட்ட 14 சங்கங்களின் பிரிவிலுள்ள நிரந்தர மற்றும் இடம் பெயர்ந்து வசிப்பவர்களின் விபரங்கள் இந்த வகையில் திரட்டப்பட்டுவருகின்றது.

கடந்த முதலாம் திகதி முதல் வடமராட்சிக் கடலில் மீன்பிடிக்க விதிக்கப்பட்ட தடையால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் ஒன்றிணைந்து, தமக்குஇரட்டித்தநிவாரணம் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து வலியுறுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க இன்பருட்டி மேற்கில் இருந்து தொண்டைமானாறு வரையான பகுதி மீனவர்கள் தவிர ஏனைய பகுதி மீனவர்கள் மீன்பிடிப்பது தொடர்பான இணக்கப்பாடொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றபடையினர் மீனவப் பிரதிநிகளுக்கிடையிலான சந்திப்பில் ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-23)

## இராசி பலன்

29 - 09 - 2001

(புரட்டாதி13, சனி)

துவாதசி பி.ப. 1.51 வரை

அவிட்டம் பி.ப.3.15 வரை

இராகுகாலம் 9.02 - 10.32

சுபநேரம் 3.02-4.32

சித்தாமி, சனிப் பிரதோஷ விரதம்

**மேடம்**
கீர்த்தி, தெய்வதரிசனம், மன மகிழ்ச்சி, குடும்ப சுகம்.

**இடபம்**
தொழில்சிறப்பு, அதிகாரம் காரிய நன்மை, சுபநிகழ்வு.

**மிதுனம்**
வீண் பயம், உடல் கோளாறு புதிய திட்டம், பெரியோர் மதிப்பு.

**கடகம்**
பிரயாண பயம், வீண் தொல்லை, திடீர் நன்மை, காரிய இடையூறு.

**சிங்கம்**
நல்ல வரவேற்பு, திடீர் பயணம், நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும்.

**கன்னி**
சந்தோஷம், ஆரோக்கியம், தொழில் விருத்தி, தனவரவு.

**துலாம்**
குடும்பக் கவலை, தொழில் சிறப்பு, கௌரவக் குறைவு, முயற்சி தாமதம்.

**விருச்சியம்**
மனச் சோர்வு, நல்லசெய்தி, காரிய தாமதம், திடீர் நன்மை.

**தனுசு**
தன வரவு, இனிய சம்பவம், நல்ல முயற்சி, அந்நியர் சந்திப்பு.

**மகரம்**
விவாதம், நிலை மாற்றம், முயற்சி தாமதம், தனவிரையம்.

**கும்பம்**
ஜனவசியம், நல்ல முயற்சி, சயனசுகம், நண்பர்கள் உதவி.

**மீனம்**
காரியஅலைச்சல், சுப செலவு, கோபப்படுதல், குடும்ப சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## பாடசாலை மாணவன்உட்பட இருவர் காங்கேசனில்

[யாழ்ப்பாணம்]

கடந்த 18 ஆம் திகதி வீட்டில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்ட கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரி மாணவனான இருபாலையைச் சேர்ந்த சாந்திராஜ் டிரோசன் (வயது-18) என்பவர் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் உள்ளதாக அங்கு சென்று திரும்பிய யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

தவிர கடந்த சில மாதங்களுக்கு முன் யாழ். கன்னாதிட்டிப் பகுதியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்ட திருகோணமலைகூனித்தீவைச் சேர்ந்த சிவனேஸ்வரன் தொடர்ந்தும் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(உ-9-10)

## பேருந்து விபத்தில் 9 பேர் படுகாயம்

(கொழும்பு)

காலி ஹிங்கொடை பிரதேசத்தில் இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் ஒன்பது பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் காலி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(செ-4)

## நாடக பயிலரங்கு ஆரம்பம்

(ஈச்சமோட்டை)

கலைஞர்களின் தென்னிலங்கை கலைப்பயணத்தினால் இடை நிறுத்தப்பட்டிருந்த திருமறைக் கலாமன்றத்தின நாடகப் பயிலக வகுப்பு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இன்று பி.ப. 4:30 மணிக்கு திருமறைக்கலாமன்றக் கலை அரங்கில் இந் நாடகப் பயிலரங்கு இடம்பெறவுள்ளதுடன் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் வழமைபோல் இடம் பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

[உ-59]

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய, அனைத்து யாழ். மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்குமான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் 2 ஆம் திகதிசெவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(உ)

## ஒப்புதல் வாக்குமூலம் செல்லுபடி யானது நீதிபதி தீர்ப்பு

(கொழும்பு)

மத்திய வங்கி குண்டு வெடிப்பு சம்பந்தமாகதடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்களின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் செல்லுபடியானது என்றுமேல் நீதிமன்றநீதிபதிசரத் எம்பலப்பிட்டியதீர்ப்பளித்துள்ளார்.

மத்தியவங்கி குண்டுவெடிப்புச் சம்பந்தமான வழக்கு விசாரணையின்போது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்பதா விடுவதா என்பது குறித்துமன்றில் விவாதம் நடைபெற்றது.

இரண்டு சந்தேகநபர்களிடம் பெற்ற குற்றஒப்புதல் வாக்குமூலம், சித்திரவதை மூலம் பெறப்பட்டதாக சந்தேகநபர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் குற்றம்சாட்டியிருந்தனர்.

எனினும் வாக்குமூலம் நியாயமான முறையில் பெறப்பட்டிருப்பதாக நீதிபதி தீர்ப்பளித்தார்.

வழக்குவிசாரணையைஅடுத்த மாதம்10ம்திகதிக்கு ஒத்திவைத்தார்.

இலங்கை மத்திய வங்கி குண்டுவெடிப்பு சம்பவத்தில் வே.பிரபாகரன், பொட்டுஅம்மான் உட்பட14பேர் மீது இவ்வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ம)

## சத்துணவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில், மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் வைபவம் நேற்று இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் க. இராசதுரை சத்துணவுப் பொதிகளை வழங்கினார்.

[உ-106-9]

## இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(வல்வெட்டித்துறை)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம, வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

பி.ப. 4.00 மணிக்கு நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில்; வதிரிடயமன்ற் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கலட்டி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

(செ-217)

## இன்று ஒரு தகவல்

# தமிழ் இதழ்கள் தோற்றம்

தமிழ் பத்திரிகைகள் தோன்றி இப்போது இருநூறு ஆண்டுகளை எட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால் தமிழ்ப் பத்திரிகைகளின் வரலாறு இன்னும் முறையாக எழுதப்படவில்லை 'ராணி' வார இதழ் ஆசிரியர் அ மா. சாமி 'தமிழ் இதழ்கள் தோற்றம்-வளர்ச்சி' என்ற நூலை எழுதியிருக்கிறார். தமிழ் இதழ்களின் வரலாற்று நூல் இது தான்;

முதல் தமிழ் இதழ்தோன்றி 190 ஆண்டுகள் வரை ஆகிவிட்டன. ஆனால் தமிழ் இதழியல் வரலாற்றில் இந்நூல் ஒரு பிள்ளையார் சுழி என்று கூறலாம்.

தமிழில் அச்சுஇதழ் முதலில் தோன்றி 190 ஆண்டுகளாயினும் தமிழ் இதழ்கள் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது எனப் பல ஆதாரங்களுடன் நிறுவுகிறார் இந்நூலாசிரியர் சாமி.

'உலகில் முதன் முதலில் இதழியல் தோன்றியது கிரேக்க நாட்டில் தான்' என்ற இதழியல் வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தை மறுத்து 'இந்திய இதழியல்-தமிழ் நாட்டு இதழியல் அதைவிடப் பழமையானது' என நிறுவ முயல்கிறார் ஆசிரியர். இது வரவேற்கத்தக்கதே, பிறநாடுகளிலும், இந்தியாவின் பிற பகுதிகளிலும் ஏற்பட்ட இதழ்களின வளர்ச்சியை வரிசைப் படுத்திக் கொண்டு வரும் ஆசிரியர், அதைத் தொடர்ந்து தமிழ் இதழ்களின்தோற்றம், வளர்ச்சியைக் குறிப்பிடுகிறார். ஏற்கனவே வெளி வந்த நூல்களின் தழுவலாக இல்லாமல், ஆசிரியரின் கடும் முயற்சியால் இந்நூல் பல உண்மைகளை வெளிப்படுத்துகிறது. தமிழின் முதல் இதழ் 'தமிழ் மெகசீன்' என்று இது வரை பலரால் ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்தை மறுத்து, தமிழ் மெகசினுக்கு முன்பே 'மாசத்தினச் சரிதை' என்ற இதழ் வெளிவந்துள்ள உண்மையை ஆராய்ந்து புலப்படுத்தியுள்ளார். அதைப் போன்று முதல் தமிழ் நாளிதழ் 'சுதேச மித்திரன்' அல்ல. 'லலித பிரசனோதயா' என்ற நாளிதழே என்ற புதிய உண்மையையும் ஆதாரங்களுடன் வெளிக் கொண்டு வந்துள்ளார். எனவே இந் நூலை முழுமையான இதழியல் வரலாற்று முதல் நூல் எனக் கூறுதல் சாலப் பொருந்தும்.

விடுதலைப் போராட்டக் காலத்தில் தமிழ் இதழ்கள் ஆற்றிய பங்கு பற்றி ஆசிரியர் விரிவாகக் குறிப்பிடுகிறார். தமிழ் இதழ்களின் வளர்ச்சியில் திராவிட இயக்கத்தின் பங்கையும் உரிய முறையில் எடுத்துக் காட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இந்நாள் வரை திராவிட இயக்கத்தாரின் பங்கு மறைக்கப்பட்டோ, மறைக்கப்பட்டோ வந்தது; ஆனால் அந்தப் பங்கைக் குறிப்பிடாமல் தமிழிதழியல் வரலாறு நிறைவு பெறாது. மின்னிதழ்கள் கடந்த நூற்றாண்டில் தோன்றியவை. அவற்றின் தோற்றம், வளர்ச்சி, எதிர்காலம் பற்றியும் ஆசிரியர் குறிப்பிடுவது இந்நூலை முழுமைப் படுத்துகிறது.

தமிழ் இதழியல் பற்றி இன்னும் ஆய்வுகள் நடத்த வாய்ப்பு இருக்கிறது என்பதையும் ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். சென்ற நூற்றாண்டிற்கு முன்னரும் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கும்மிப்பாடல்கள் வடிவில் வெளிவந்த சிறுசிறு நூல்களும் செய்தி இதழ்களே என்று தக்க சான்றுகளுடன் கூறுகிறார்: இத்தகைய கருத்துக்கள் மேலும் சிந்திக்கத் தக்கன. இத்தகைய ஆய்வுகள் தமிழ் நாட்டுடன் நின்றுவிடக்கூடாது. இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும், தமிழர் வாழும் கடல் கடந்த நாடுகளிலும் தமிழ் இதழ்கள் வெளிவந்தன. வருகின்றன. அவை பற்றிய தகவல்களும் திரட்டப்பட்டால் தான் தமிழ் இதழியல் வரலாறு முழுமை பெறும்; அமரர் ஆதித்தனாரின் மாணவர் என்ற முறையிலும், 'ராணி' வார இதழின் ஆசிரியர் என்ற நிலையிலும் இந்நூலை மிக எளிய தமிழில் ஆக்கியுள்ளார் ஆசிரியர். அதனால் இந்த வரலாற்று நூலைப் படிக்கும்போது ஒரு கதை நூலைப் படிப்பது போன்ற உணர்வே ஏற்படுகிறது.

நூலில் சேர்க்கப்பட்டுள்ள பாடல்கள் 'பொன்மலர் நாற்றமுடைத்து' என்பது போன்று நூலுக்கு மேலும் சிறப்பூட்டுகின்றன; ஆசிரியர் ஆறு ஆண்டு காலம் அருமுயற்சி செய்து இதனைப் படைத்து இருக்கிறார். நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் அவரது உழைப்பை நாம் உணரமுடிகிறது; பல அரிய மூல நூல்களைப் படித்து ஆதாரங்களை ஆய்ந்து இந்நூலைப் படைத்துள்ள ஆசிரியர் அவ்வரிய மூலாதார நூல்களின் பட்டியலைத் தந்திருந்தால் எதிர்கால இதழியல் ஆய்வாளர்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்திருக்கும்.

இந்நூல் ஒரு முழுமையான வரலாற்று நூல் என்பதில் சிறிதும் ஐயமிலலை. இது இதழியல் மாணவர்களுக்குப் பாடநூலாகவும் வைக்கத் தக்கது. மேலும் மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை. திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்ற பாரதியின் கூற்றுக்கேற்ப இவ்வரலாற்றுப் பெருமைகளை நாம் மட்டும் பேசிக் கொண்டிருந்தால் போதாது. வெளிநாட்டாரும் அறிய வேண்டும். அதற்கு இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடவேண்டும். எனவும் பரிந்துரைக்கிறேன்.

முனைவர் து. சதாசிவன்

# காணாமற்போன அச்சுவேலி மாணவி யாழ். சிறைச்சாலையில்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய மாணவியான வன்னியசிங்கம்வினோதா (வயது11) யாழ்.சிறைச்சாலையில் உள்ளதாக அங்கு சென்றுதிரும்பிய மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி என்; ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை வீட்டில் இருந்து புறப்பட்ட மேற்படி சிறுமியைக் காணவில்லை என தாயாரினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே.

மேற்படி சிறுமியை உறவினர் ஒருவர் கண்டுபிடித்து மல்லாகம் நீதிமன்றில் ஒப்படைத்த போது, நீதிபதியின் உத்தரவிற்கிணங்கவே சிறை வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-9,10)

## வடக்கு-கிழக்கில்

# புனர்வாழ்வு அபி. திட்டங்களுக்கு அறுநூறு மில்லியன் ரூபா நிதிஉதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைந்த புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 600 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

இத்திட்டம் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 5 வருடங்களினுள் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதன்படி வடக்கு-கிழக்கிலுள்ள சகல மாவட்டங்களிலும் புனரமைப்பு செய்யப்படவேண்டிய துறைகள் இனங்காணப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இத்திட்டத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்படுத்துவதற்கான ஆலோசனைக்கூட்டம் எதிர் வரும் 11 ஆம் திகதி அரச அதிபர் சி. சண்முகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இத்திட்டத்தின் இணைப்பாளராக சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி ரி லங்கா நேசன் கடமையாற்றவுள்ளார்.

(உ-5)

## லொறி குடைசாய்ந்தது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் உணவுக்களஞ்சியத்திலிருந்து புறப்பட்ட சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத்திற்கு சொந்தமானலொறி ஒன்று வெள்ளத்துள் அகப்பட்டு கட்டுப்பாட்டை இழந்ததில் மதிலுடன் குடைசாய்ந்தது.

இவ்விபத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

(செ-19)

## கலைப்பீட விரிவுரைகள் ஆரம்பம்

(வல்வெட்டித்துறை)

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட புதிய கல்விஆண்டு 2001/2002 மாணவர்களுக்கான விரிவுரைகள் ஒக்ரோபர் 1 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இராமநாதன் நுண்கலைக் கழக 1 ஆம் வருட மாணவர்களுக்கும் அன்றையதினம் விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன.

(செ-217)

## செயல்முறை செயலமர்வு

(மந்திகை)

தென்மராட்சிவலயப் பாடசாலைகளில் தரம் 7-11 வரை விஞ்ஞானப் பாடம் கற்பிக்கும ஆசிரியர்களுக்கான செயல் முறைச் செயலமர்வு ஒக்ரோபர் 2 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

(செ-23)

## திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை புனித வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னையின் திருநாள் திருப்பலி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7. 15 மணிக்கு இடம் பெறும்.

இக் கூட்டுத் திருப்பலி யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும்.

(செ-106)

★ ★

(கோப்பாய்)

உரும்பிராய் புனிதமிக்கேல் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை நற்கருணை ஆராதனையும், நாளை ஞாயிற்றுக்கிழமை திருநாள் திருப்பலியும் நடைபெறவுள்ளது.

(செ- 79)

★ ★

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை புனித செபமாலை மாதா தேவாலயம் வருடாந்த திருநாள் உற்சவம் நேற்று மாலை 4.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணைத் திருப்பலியும் 7 ஆம் திகதி ஞாயிற்றுகிழமை காலை திருநாள திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்,

சென்ற ஆண்டு யுத்த சூழ்நிலை காரணமாக வருடாந்த திருநாள் நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

(செ-223)

## யாழ் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்கள் ரூபா 6 கோடி செலுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உணவுத் திணைக்களம் இயங்கியகாலப் பகுதிகளில் அத்திணைக்களத்தில் இருந்து மானிய அடிப்படையில் மாவினைக் கொள்வனவு செய்த யாழ் மாவட்டத்திலுள்ள ப.நோ.கூ. சங்கங்கள் சுமார் ஆறு கோடி ரூபா வரை இன்னமும் செலுத்தவேண்டியிருப்பதாக யாழ். செயலகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பிட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளைக் காட்டி உணவுத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய மேற்படி தொகை இது வரை செலுத்தப்படவில்லை என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(ம)

## வாதரவத்தையில் இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

வாதரவத்தை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில், உரும்பிராய் லயன்ஸ்கழகத்தினரல் நாளைஞாயிற்றுக்கிழமைவாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் இலவச பொது மருத்துவ முகாம்நடத்தப்படவுள்ளது.

இம்முகாமில் பல்வேறு விதமான நோய்களுக்கும்சிசிச்சை அளிக்கப்படவுள்ளது. இப் பகுதி மக்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திபயன்பெறுமாறு வாதரவத்தை கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ். பத்மதாசன் கேட்டுள்ளார்.

[உ-106]

## அமைச்சர் டக்ளஸ் மட்டு. மக்களுடன் தொலைபேசியில் உரையாடல் பிரச்சினைகளை கேட்டறிவு

(யாழ்ப்பாணம்)

அடுத்த வருட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளின் போது கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள மத்தியில் செய்யபபட வேண்டிய வேலைத் திட்டங்களுக்காகவும், எமது அமைச்சின் ஊடாக நிதி ஒதுக்கீடுகளைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொளளப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே. என. டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்பு வலய முன்பள்ளி ஆசிரியர்கள், ஆரையம்பதி ஸ்ரீ விநாயகர் வித்தியாலயத்தினர், சேத்துக்குடா ஸ்ரீ வித்தி விக்னேஸ்வரர் ஆலயததினர், வலையிறவு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தினர், ஆந்து மகளிர் மன்றத்தினர் ஆகியோர் மத்தியில தொலைபேசி மூலமாக உரையாடிய அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் நலன்களைப் பேணி பாதுகாக்கவும, அவர்கள் மத்தியில அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவும் நாங்கள் ஆர்வமாகவே இருக்கின்றோம்.

எனினும் அதற்கான அதிகாரம மக்களால் எமக்குக் கிடைக்கவில்லை. அதாவது எமது கட்சியின் பிரதிநிதிகள இம் மாவட்டத்திலிருந்து கடந்ததடவை வாக்குகளைப் பெறவில்லை என்றார்.

இந்தக் கலந்துரையாடலின் போது நீண்டகாலமாக சேவையில் ஈடுபட்டுள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் தமக்கு மாகாண சபையுடன் பேசி அல்லது கட்சி நிதியிலிருந்து மாதாந்தக் கொடுப்பனவு பெறுவதற்கு உதவும்படி கோரிக்கை விடுத்தனர்.

இவர்களது கோரிக்கைகளைக் கவனமாகச் செவிமடுத்த அமைச்சர் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

(உ)

## சிந்தனைக்கு விருந்து

### பணம் அனுப்புகிறோம்

அடுத்தவீட் டையாவே அப்பா கிரியை
நடத்துங்கள் நல்லபடி யாக - எடுத்தே
அனுப்புங்கள் வீடியோ ஆகும் செலவுக்(கு)
அனுப்புகிறோம் நாங்கள் பணம்

'பழையவன்'

# பின்லேடன் எங்கும் செல்லவில்லை
# ஆப்கானிலேயே தங்கியுள்ளார்
## பகிரங்கமாக அறிவிப்பு

(காபூல்)
ஒஸாமா பின்லேடனை ஆப்கானிஸ்தானைவிட்டு வெளியேறுமாறு கூறும் மதகுருமாரின் சமயத் தீர்ப்பு பின்லேடனிடம் கையளிக்கப் பட்டுள்ளதாக தலிபானின் தகவல் தொடர்பு அமைச்சர் குதுப்துல்லாயமார் தெரிவித்துள்ளார்.

பின்லேடன் மறைந்துவாழ்வதால், அவருடன் தொலைபேசி மற்றும் தொலை நகல் மூலம் தொடர்பு கொள்ள முடியாது போய்விட்டதாகவும் அதனால் நேரில் சென்று கையளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி சமயத் தீர்ப்பு பின்லேடனின் கையில் ஒப்படைத்ததால் அவர் ஆப்கானிஸ்தானிலேயே மறைந்து வாழ்வது உறுதியாகியுள்ளதாகவும் வேறு நாடுகளுக்கு செல்லவில்லை என்பதும் தெளிவாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உலக தரிசனம்

அதேசமயம், நேற்றுமுன்தினம் ஒஸாமாபின்லேடன் செச்சினியாவிற்கு தப்பியோடியுள்ளார் என அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் கூறியுள்ள செய்தி உண்மைக்குப்புறம்பான செய்தி என்று, ஆப்கானில் பின்லேடனின் ஆதரவாளர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க பின்லேடன் ஆப்கானிலோ அல்லது வேறுஎந்த நாட்டிலோ இருந்தால் நீண்டநாட்கள் அவரால் தலைமறைவாக வாழ முடியாது என அமெரிக்க அதிபர் புஷ் ஊடகங்களினூடாக அறிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

# அமெரிக்கத் தாக்குதல் நினைவாக நாணயம் வெளியீடு

(வாஷிங்டன்)
அமெரிக்க நகரங்கள் மீதான தாக்குதல்கள் நடைபெற்றதை நினைவு கூரும் முகமாக நாணயம்வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான யோசனையை அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர் இருவர் முன்வைத்துள்ளனர்.

இந்நாணயத்தின் ஒருபக்கத்தில் அமெரிக்கக் கொடியும் மறு பக்கத்தில் உலக வர்த்தக மையத்தின் இரட்டைக்கோபுரம் மற்றும் பென்ரகன் என்பவற்றின் உருவங்கள் பொறிக்கப்படவுள்ளன.

இதேவேளை இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டவர்களின் குடும்பத்திற்கு நிதி சேகரிக்கும் முகமாகமுத்திரைகளை வெளியிடும் யோசனையும் பாராளுமன்ற உறுப்பினர்களினால் முன்வைக்கப் பட்டுள்ளன.

இதற்குமுன், மார்பக புற்றுநோய் தொடர்பான ஆராய்ச்சிக்குத் தேவையான நிதியினைத் திரட்டுவதற்கு விசேட முத்திரை வெளியிடப் பட்டபோது 2 கோடிஅமெரிக்க டொலர்கள் திரட்டப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

### சுவிஸ் பாராளுமன்றில் அனர்த்தம்
# துப்பாக்கி நபர் வெறியாட்டம்
# 14பேர் அந்த இடத்திலேயே மரணம்

(சூரிச்)
சுவிஸ்லாந்தின் பாராளுமன்றக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை அங்கு திடீரென நுழைந்த நபரொருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 14 பேர் கொல்லப்பட்டனர். பலர்காயமடைந்தனர். இவர்களில் 8பேரின்நிலைகவலைக் கிடமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை பாராளுமன்றம் கூடியபோது பாதுகாப்புக்கடமையிலிருந்த பொலிஸ் வேடத்தில் அங்கு நுழைந்த துப்பாக்கி நபர், சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்ததுடன் கைக்குண்டையும் வீசியுள்ளார்.

பின்னர் தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

அவரிடமிருந்து ஒரு கடிதம் கண்டெடுக்கப் பட்டது. அக்கடிதத்தில், உள்ளூர் அதிகாரிகள் பற்றிய பல முறைப்பாடுகள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி துப்பாக்கி நபர் அமெரிக்க உள்ளூர் விமான சேவை விமான ஓட்டியென தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5

# ஒஸாமா உருவத்தை நெஞ்சில் பதித்த அமெரிக்க வாசி கைது

(வாஷிங்டன்)
ஒஸாமா பின்லேடனின் உருவத்தை நெஞ்சில் பச்சை குத்தி வைத்திருந்த ஒருவர் கலிபோர்னியாப் பொலிஸால் கைது செய்யப் பட்டுள்ளார்.

பின்லேடனின் தலையைத் தனது மார்புப் பகுதியில் பச்சை குத்தியதுடன் பின்லேடனுக்கு ஆதரவான குறியீட்டு வார்த்தைகளையும் அவர் தனது கைப் பகுதிகளிலும் தொடைப் பகுதிகளிலும் பச்சை குத்தியிருந்தார்.

இவரிடமிருந்து போலி கடவுச் சீட்டுக்கள் மற்றும் போலி ஆவணங்கள் பலவும் கைபற்றப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (உ-7)

# விமானப் பயணிகள் உயிருக்குபுஷ் உத்தரவாதம்

(வாஷிங்டன்)
அமெரிக்கர்கள் மீண்டும் விமானங்கள் மூலம் பயணம் செய்து தமது அலுவல்களைக் கவனிக்க வேண்டும் என்று அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

சிக்காக்கோ விமான நிலையத்தில் உரையாற்றும் போது இவ்வாறு கூறிய அவர் நாட்டு மக்களுக்கு மீண்டும் விமானத்தில் நம்பிக்கையை ஏற்படுத்த கடுமையானபாதுகாப்புஅளிக்கப்படும் என்றார்.

மேலும் அவர் பேசுகையில் தேசிய பாதுகாப்புபடைவீரர்கள் விமான நிலையங்களையும் விமானிகள் தங்கும் அறைகளையும் பாதுகாப்பார்கள் என்றும் குறிப்பிட்டார்.

இந்தப் பாதுகாப்புச்சேவைகளுக்காக50 கோடி டொலர் மேலதிகமாக ஒதுக்கப்படுமென்றும் அவர் கூறினார். (உ-து)

# புனிதப் போருக்கு மலேசிய முஸ்லிம்கள் ஆதரவு இல்லை

(கோல லம்பூர்)
தலிபான்களின் புனிதப் போருக்குத் தாங்கள் ஒத்துழைப்புக் கொடுக்கப் போவதில்லை என்று மலேசிய முஸ்லிம் அமைப்பு தெரிவித்துள்ளது.

தலிபானுக்கும், அமெரிக்காவிற்கும் போர் தொடங்குமாயின் அது ஒரு மத சம்பந்தமான போராகஅமையாதென்றும்.

இஸ்லாம் மதத்துக்கும் இந்தப் போருக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென்றும் இது பயங்கரவாதம்தொடர்புடைய போரானதால் மலேசியா முஸ்லிம்கள்இதற்கு ஆதரவாக இருக்கக் கூடாதென்றும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

மலேசியாவிலுள்ளமுஸ்லீம் மத சார்புடைய அத்வாலி சபையின் தலைவர் இஸ்லாம் இப்றாகிம் இக்கருத்தினைத் தெரிவித்துள்ளார். து)

# இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கத்திற்கு இந்திய மத்திய அரசு தடைவிதிப்பு

[புதுடில்லி]
இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கம் இந்திய மத்திய அரசினால் தடை செய்யப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இயக்கத்தின் சட்ட விரோத செயற்பாடுகள் குறித்து பல மாநில அரசுகள் சுட்டிக்காட்டியதுடன் அதனைத் தடைசெய்யும்படி ஒருமித்தகுரலில்கேட்டுவந்ததால் தடை செய்யும் முடிவு எடுக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு அதிகாரிஒருவர் தெரிவித்தார்.

1967 இல்உருவாக்கப்பட்ட சட்டவிரோத அமைப்புகள் தடைச் சட்டத்தின் கீழ் மேற்படி அமைப்பு தடை செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஏ. இற்கும் இம் மாணவர் இயக்கத்திற்கு தொடர்புகள் இருப்பதாகவும்,

இந்தியாவில்அடிக்கடிநடைபெற்று வரும் தீவிரவாதத் தாக்குதலுடனும் இனிவரும் காலத்திலஇடம்பெறும்பாரிய தாக்குதல்களுக்கும் இவர்கள் காலாய் இருக்கலாம் என்ற அச்சத்தின் பேரிலேயே இத்தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, மேற்படி இயக்கத்தின் தலைவர்ஷாகிப் மற்றும் கூட்டாளிகள் சிலரை பின்லேடனை வாழ்த்தும் சுவரொட்டிகளை நகரப்பகுதியில் ஒட்டமுனைந்தவேளை பொலிஸார் கைது செய்திருப்பதாக பிந்திக்கிடைத்த தகவல் தெரிவிக்கிறது. [உ-2)

# கொப்பியடித்த மாணவர்களை காட்டிக் கொடுத்த சிறுவன் மீது கொலை முயற்சி

(புதுடில்லி)
பத்தாம் வகுப்பு மாணவர்கள் மூவர், பரீட்சையில் பார்த்து எழுதியதை காட்டிக் கொடுத்த ஆறாம் வகுப்பு மாணவனை பார்த்தெழுதிய மேற்படி மூன்று மாணவர்களும் மண்ணெண்ணெய் ஊற்றி கொழுத்தியுள்ளனர்.

தமிழ் நாடு சேலம் மாவட்டம் ஏறாப்பூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் கற்கும் அம்மாணவர்கள் குறித்த மாணவன் வீட்டில் தனியாக இருந்தவேளை அவரது வீட்டில் நுழைந்தே இக்கொடூரமான செயலை நிகழ்த்தியுள்ளனர்.

11 வயது நிரம்பிய மேற்படி மாணவன்வாழ்வா? சாவா? என்ற நிலையில் உயிருக்கு போராடிக்கொண்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-207)

### பின்லேடன் ஆதரவு ஆர்ப்பாட்டம்
# மாணவர் மீதுதாக்கு நால்வர்பலி: பலர்படுகாயம்

(லக்னோ)
இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் ஒஸாமாபின் லேடனுக்கு ஆதரவாக இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது 4 மாணவர்கள் பலியானதுடன் 10பேர் படுகாயமடைந்துள்ளனர்.

உத்தரப் பிரதேச லக்னோ தலைநகரில் இஸ்லாமிய மாணவ அமைப்பொன்று ஒஸாமா பின்லேடனுக்கு ஆதரவாக ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினை நடத்த ஏற்பாடு செய்திருந்தது: அதனை இந்திய அரசாங்கம் நாடுமுழுவதும் தடைசெய்திருந்தது.

அத்தடையை மீறிமேற்படி மாணவ அமைப்பு ஆர்ப்பாட்டத்தில் இறங்கியதில் அதனை தடுக்க முனைந்த பொலிஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையில் துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றதில் 4மாணவர்கள் பலியாகியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (உ-7)

# இத்தாலி நாட்டு பிரதமரின் கருத்துக்கு ஈரான் கடும் கண்டனம்

(ரோம்)
மேற்குலகநாகரிகம், இஸ்லாமியநாகரிகத்தை விடசிறந்ததென்று இத்தாலியப்பிரதமர் கூறியிருப்பது அவரின் அறியாமைத்தனமே என்று ஈரான் கருத்து வெளியிட்டுள்ளது

மேற்குலக நாகரிகத்தின் மீது இஸ்லாமிய கலாசாரமும் நாகரிகமும் ஏற்படுத்தியுள்ள அடிப்படைத் தாக்கத்தைப் பற்றி அறியாதநிலையில்இத்தாலியப் பிரதமரின் கருத்து அமைந்துள்ளது எனஈரானின் வெளியுறவு அமைச்சர் கமால் கராச்சே கூறியுள்ளார்.

மேலும் இத்தாலியப் பிரதமர் தனது கருத்து பிழையானது என்பதை உணர்ந்து அதனை மாற்றிக் கொள்வார் என்றும் ஈரான் எதிர்பார்ப்பதாக ஈரானின் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ-7)

## செய்திப் பரல்

★ அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை 34 ஆயிரத்து 400 கோடி டொலர் பாதுகாப்புச் செலவுக்கு ஒதுக்கியிருப்பதை அங்கீகரித்திருக்கிறது.

★ செச்சினியாவில் கிளர்ச்சிக் காரர்களுடன் சமாதானப் பேச்சுக்கு ஜனாதிபதி புட்டின் முன் வந்திருப்பதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

★ அமெரிக்காமீதான தாக்குதலை அடுத்து இந்தியாவில் இந்து முஸ்லிம வகுப்புக் கலவரம்ஏற்படாமலிருக்க அதிகாரிகள் உஷார் நிலையில் உள்ளனர்.

### பொதுநலவாய நாடுகளின்
# மகாநாடு ஒத்திவைப்பு

(சிட்னி)
அடுத்தமாதம் அவுஸ்ரேலியாவில் நடைபெற விருந்த பொது நலவாய நாடுகளின் தலைவர்களது மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது.

அவுஸ்ரேலியாவில் பிறிஸ்போனில் இம் மகா நாடு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அமெரிக்காவில் நிகழ்ந்த தாக்குதலைத் தொடர்ந்து மகாநாட்டைக் கூட்டுவது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதால் ஒத்தி வைக்கப்பட்டது. [து]

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை
மாநிலத்து மன்னுயிர்க்கெல் இனிது
-குறள்

வலம்புரி

## வீழ்ச்சி காணும் யாழ், கல்வி

யாழ். மாவட்டத்தின் கல்விநிலைஅண்மைக் காலமாக பெரும் வீழ்ச்சியைக் கண்டுள்ளது. கல்வியில் முன்னேற்றம் கண்டிருந்த யாழ்ப்பாணத்தில் இத்தகையவீழ்ச்சி குறித்து கல்விமான்கள் பலரும் கவலை வெளிப்படுத்தினாலும் அதனைத்தடுத்து நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

கல்வியைத் தனது மூலதனமாகக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத்தில் கல்வி வீழ்ச்சியடைந்து செல்வதை நேற்று முன்தினம் பரீட்சைத் திணைக்களம் வெளியிட்ட 5ம்தர புலமைப் பரீட்சையின் மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளிகள் ஆதாரப் படுத்தியுள்ளன. 5ம் தர புலமைப் பரீட்சையில் கடந்த ஆண்டு 134 ஆக இருந்த யாழ் மாவட்ட வெட்டுப் புள்ளி இந்த ஆண்டு 118 புள்ளிகளாகக் குறைவடைந்துள்ளது. இதிலிருந்து கல்வியின் சரிவை அறிய முடியும் இது மட்டுமன்றிபின் தங்கிய மாவட்டங்களென கணிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களின் வெட்டுப்புள்ளிகள் 120 ஆக உள்ளது.

பொருளாதாரத் தடையின் மத்தியிலும் வன்னி மாவட்டங்களின் வெட்டுப்புள்ளிகள் உயர்வடைந்திருப்பது பாராட்டுக்குரியது. அதே வேளை ஓரளவேனும் அடிப்படை வசதியுடைய யாழ்ப்பாண மாவட்டத்தின் வெட்டுப் புள்ளி வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் முன்வைக்கப் பட்டாலும் டொனேசன் கலாசாரம் முக்கிய காரணமாக அமைந்துள்ளது. குறிப்பாக பிரபல ஆரம்பப் பாடசாலைகள் 'டொனேசனை' மையமாகக்கொண்டே மாணவர்களின் அனுமதியைத் தீர்மானிக்கின்றன. இதனால் திறமையான ஏழை மாணவர்களுக்கு இப் பாடசாலைகளில் கற்பதற்குசந்தர்ப்பம்கிடைப்பதில்லை.

பெற்றோர்களின் கண்காணிப்பும் வழிகாட்டலும் கிடைக்காத மாணவர்களுக்கு பாடசாலை சூழலும் பாதகமாகஅமைந்துவிடுகிறது. இதனால் புலமைப்பரீட்சையில் சித்தியடையக் கூடிய மாணவர்கள் கைவிடப் படுகிறார்கள்.

எனவே 'டொனேசன்' எனும் ஏழை மாணவர்களின் எதிரியை அழித்தொழிக்க இனிமேலாவதுகல்வித்திணைக்களம் கரிசனை காட்டுவது மிகமிக அவசியமாகும்.

# திருமாலின்திருவடிக்குச் சாத்த உகந்த துளசி

## வருநோய்கள் பல தீர்க்கவல்லது

துளசி என்றால் 'தன்னிகரில்லாதவள்' என்றுபொருள் வீடுகளில்துளசிமாடம்வைத்து பூசிக்கும் செடியாகஅதுவிளங்குகின்றது. திருமால் கோவிலிலும், ஆஞ்ஞநேயர் சந்நிதியிலும்துளசியைப்பிரசாதமாகக் கொடுப்பார்கள். பிரசாதமாக அளிக்கப்படும் துளசிதளத்தை, அடியார்கள்வாயில் போட்டுமென்று உடலில் சேர்த்து விடுவார்கள். இப்படியான பெருமை எந்த ஒரு இலைக்கும், பூவிற்கும் கிடையாது. மகாலட்சுமியின் சொரூபமான துளசி இருக்குமிடத்தில் மகாவிஷ்ணு எப்பொழுதும் வாசஞ்செய்கிறார்.

மகாவிஷ்ணுவிற்குப் பிரியமான துளசிதளம் சிவபெருமான் பூசைக்கும் ஏற்றதே. இந்துக்கள் செய்யும் எந்கப் பூசையிலும் துளசி முக்கிய இடம்வகிக்கிறது. துளசி, சந்தணம், குங்குமம், தீபம், கண்ணாடி என்பன மங்களமான பூசைப் பொருட்களாகக் கணிக்கப்படுகின்றன. ஏகாதசி விரதம் நோற்போர், மறுநாள் துவாதசியிலன்று திருத்துழாயமுது (துளசி கலந்த தீர்த்தம்) அருந்தி உபவாசத்தை முடிப்பது பெரும்புண்ணியமாகும்.

### மருத்துவ குணம்

துளசியின் மருத்துவ குணங்கள் பலப்பலவாகும். சுதேச மருத்துவர் நோய்க்குத்தக்கபடிதுளசியின் இலையில்சாறு பிழிந்து மருந்து இட்டுக் கொடுப்பர் அன்றாடம் பத்துதுளசிஇலைகளைமென்று தின்பதால் இரத்தம் சுத்திகரிக்கப் படுவதோடு, மார்புவலி, தொண்டைநோவு, வயிற்றுவலி, ஆகிய நோய்களும் குணமாகின்றன. மாதவிடாய்க் கோளாறுகளும் நீங்குகின்றன. காதுவலி, தீராத வயிற்று வலி, மலச்சிக்கல், சிறுநீரகக் கோளாறுகள் போன்றவற்றிற்கும் துளசி நிவாரணம் அளிக்கிறது.

துளசிஇலைகளைக்கொண்டு தயாரிக்கப்படும் கஷாயம் வாய்த் துர்நாற்றத்தையும், மற்றும் பால்வினை நோய்களையும் குணமாக்கவல்லது. இப்பேர்ப்பட்ட துளசியைப் பற்றி அழகான சுவையான கதையொன்று உள்ளது.

### கண்ணனின் சாபம்

கோகுலத்தில் கண்ணனின் காதலில் கட்டுண்டு பரவச நிலையில் அழகுப்பதுமையாக ராதை அமர்ந்திருக்கிறாள். அன்பினிலிணைந்த இதயங்களைக் கெடுக்கும் விதமாக ஏதோஒருஒலிகேட்டது. அவர்களின் இன்பத்தைக்குலைத்த வண்ணம் வந்த சுதர்மனும் ராதையின் தோழியும் கண்ணனின் கோபத்திற்காளானார்கள். அவர்களிருவரும் பூமியிற் பிறந்துழலும்படி கண்ணபிரான் சபித்தார். அச்சமடைந்த இருவரும் கண்ணனின் கிருபையை வேண்டி நின்றனர். ராதையின் தோழியை நோக்கி 'பெண்ணே! நீ தர்மத்துவசனுக்கு மகளாகப் பிறந்துசங்கசூடனைத் திருமணஞ் செய்து சில காலம் பூமியில் இருந்து பிறகு வருக!' என்று கண்ணன் கூறினான். பிறகு சுதர்மனைப் பார்த்து 'நீ பூமியில் சங்கசூடன் என்ற அரசனாகப் பிறந்து, சிவபெருமானால் சாபவிமோசனம் அடைவாய். பரமசிவனோடு போர்புரிந்து இறந்து மீண்டும் என்னிடம் வருவாய்' என்று கூறியருளினார். அவர்களிருவரையும் கண்ணனின் சாபம்பற்றியது.

ராதையின்தோழியானவள் தர்மத்துவசனுக்கும் மாதவிக்கும் மகளாகப் பிறந்தாள். அந்தக் குழந்தைக்கு துளசியெனப் பெயரிட்டு கண்ணும் கருத்துமாக மாதவி வளர்த்து வந்தாள். துளசியும் பெயருக்கேற்ப அழகும் குணமுமிக்கவளாக வளர்ந்து மணப்பருவத்தையடைந்தாள்.

பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு
ஸ்ரீவல்லிபுரக் கோயில்

அசுரகுல அரசனான சங்கசூடனைச் சந்திக்கும்வாய்ப்பு துளசிக்கு ஏற்பட்டது. ரதி போன்ற துளசியும் மன்மதனைப்போன்ற சங்கசூடனும் சந்தித்தனர். இருவருள்ளும் அன்பு மலர்ந்தது. பிரம்மதேவன் அங்கு தோன்றி இருவருக்கும் திருமணம் செய்து வைத்து மறைந்தார். இருவரும் இல்வாழ்வில் இணைந்தனர்.

தேவிபக்தனானசங்கசூடன் தேவியினால் ஒப்பற்றவலிமையைப் பெற்றான். தன் வலிமையினால்கர்வமடைந்து சங்கசூடன் தேவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். தேவர்கள் பலரை சிறையிலிட்டு வருத்தினான். தப்பியோடிய தேவர்கள் சிவபெருமானிடம் சென்றுசங்கசூடனின் கொடுமைகளையெல்லாம் எடுத்துக் கூறி தங்களை அவனிடமிருந்து காப்பாற்றும்படி வேண்டினர்.

### சிவபெருமானுடன் போர்

சிவபெருமானும் சித்திரத்தன் என்னும் கந்தர்வனொருவனைஅழைத்துசங்கசூடனிடம் சென்று ''தேவர்களை உடன் விடுவித்து அவரவர்களுடைய பதவிகளைப் பழையபடியே திருப்பித்தரச் சொல் இல்லாவிடின் என்னைப் போரில் சந்திக்கச் சொல்'' என்று கூறியனுப்பினார். பரமசிவன் கட்டளைப்படி சித்திரதத்தனும் சங்கசூடனைச் சந்தித்து பரமேஸ்வரன் சொல்லியனுப்பிய செய்தியைக் கூறினான்.

சங்க சூடனோ சித்திரதனைப் பார்த்து ''தேவர்கள் எங்கள் விரோதிகள், காலங்காலமாக எங்கள் குலத்திற்கு தீமை செய்பவர்கள். எங்கள் குல கொழுந்துகளை நாசஞ் செய்பவர்கள். அதனாற்றான் அவர்களை நான் சிறையினிலடைத்தேன்'' என்றுகூறி அவர்களை விடுவிக்க மறுத்துவிட்டான்.

சங்கசூடன்முக்காலத்தையுமுணர்ந்தவன். தான் யார் என்பதையும் தான் பூமியில் தோன்றிய காரணத்தையும் நன்கறிவான். தன் சாபம் தொலையும் நல்லவேளை வந்து விட்டது. சிவபெருமானோடு போரிட்டு மடிந்து கண்ணனுடன் இணையுங்காலம் நெருங்கிவிட்டது என்பதையும் உணர்ந்தான்.

போர் மூண்டது. சங்கசூடனின் மனைவி துளசி கற்பில் சிறந்த பதிவிரதை. அவள் கற்பின் சக்தி மிகவும் வலியது அது அரணாக சங்கசூடனைக் காத்து வந்தது இந்த உண்மையை உணர்ந்த திருமால் சிவனுக்கு உதவ முன் வந்தார்.

சங்கசூடன் வடிவெடுத்து வந்து துளசிமுன் நின்ற திருமாலை தன் கணவன் என்றெண்ணி, கலந்தாள். அவளது பதிவிரதா தர்மம் களங்கமடைந்தது.

### துயருற்ற துளசி

உண்மையுணர்ந்த துளசி பதறினாள். கடுஞ் சினமடைந்த துளசியைத் தேற்றிய திருமால் ''துளசி வருந்தாதே! நீ அடுத்த பிறவியில் என்னை அடைய வேண்டியவள். என் செயலின் சூட்சுமம் உனக்குப் புரியாது. தேவர்களுடைய நன்மையின் நிமித்தம் நான் சில நுட்பமான வேலைகளைச்செய்யவேண்டியிருக்கிறது. வரும் பிறப்பில் உன்னை நான் மணப்பேன் உன்னை விட உகந்தது எனக்கு வேறு எதுவுமில்லை'' என்றார். பின்னர் சிவபெருமான் சங்கசூடனை எளிதில் சங்காரஞ் செய்தருளினார்.

மனம் கலங்கி நின்ற துளசிக்கு கணவனின் மறைவு பேரிடியானது. சோகத்தில் அலறியபடி அவன் உடலோடு தானும் தீயில் விழுந்து இறந்தாள்.

அவள் உடலை திருமால் துளசிச் செடியாக்கி, அவளை சிரஞ்சீவியாக்கியருளினார். துளசி பரிசுத்தமானவளாக பாவங்களைப் போக்குபவளாக, பரமகல்யாணியாகத் திகழ்கிறாள்.

இப்பேர்ப்பட்ட மகிமை வாய்ந்த துளசியை நம் வீடுகளில் அழகிய மாடங்களில் வளர்த்து சிரத்தையுடன் பூசை செய்வது சிறப்பு வாய்ந்ததாகும். பெண்கள் அனுதினமும் ''ப்ருந்தா, ப்ருந்தாவனீ, விச்வபூதஜிதா, விச்வபாவனி, புஷ்பஸாரா, நந்தனீச, துளஸீ, க்ருஷ்ஜீவனீ, ஏதத்நாமாஷ்டகம், சைவஸ்தோத்ரம் நாமார்த்த ஸம்யுதம், ய:, படேத், தாம்ச ஸம்பூஜ்ய ஸோச்வமேத பலம் லபேத்'', என்ற சுலோகத்தைச் சொல்லி வழிபட்டு வந்தால் நல்ல கணவரையடைவர்.

தீர்க்க சௌமாங்கல்யமும், சௌபாக்கியமும் பெருகும்.
''கண்ணன்கழலடிபோற்றி'' □

## தினசரி தியானம்

### இறந்த காலமும் எதிர் காலமும்

அன்று முதல் இன்றளவும் அறியாப்பருவமதில்
என்றும் பொதுவாயிருந்த நிராமயன் காண்.

-பட்டினத்தார்-

காலத்துக்கும் காலனாயுள்ள கடவுளே, யான் யாண்டும் உன்னை என் இதயத்தில் காண்பேனாக.

இறந்த காலம் இனி வருவதில்லை. கனவு போன்று அது மறைந்து போய் விட்டது. அதைப் பற்றிய எண்ணமோ நிகழ்காலத்துக்குரியது. எதிர் காலம் வெறும் மனோ கற்பனை. அக் கற்பனையும் நிகழ்காலத்தில் தான் இருக்கிறது. இடையறா நிகழ்காலமே யாண்டும் உளது ஆத்ம சன்னிதானம் என்பது இதுவே.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.

# கல்லூரிகளுக்கிடையிலான வருடாந்த உதைபந்தாட்டம் இன்று ஆரம்பம்

[சுண்டுக்குளி]
கல்லூரிகளுக் கிடையிலான வருடாந்த உதைபந்தாட்ட விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

இதில்முதற்கட்டமாகதெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிகளை எதிர்த்து சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிகள் மோதவுள்ளன.

3-வது அணிக்கான ஆட்டம் இன்று ப2 00மணிக்கு சென் பற்றிக்ஸ் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

[செ-110]

# இரவு வேளையில் படையினர் சோதனை

(சுண்டுக்குளி)
கடந்த செவ்வாயன்று மாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை சுண்டுக்குளி குருசோ வீதி, மத்தியூஸ் வீதிப்பகுதிகளில் வீடுவீடாகச் சென்று படையினர்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இச்சோதனை நடவடிக்கையின் போது அகப்பட்டசிப்பு உற்பத்தியாளர் மற்றும்அங்கு நின்ற வாடிக்கையாளர் ஆகியோரைப்படையினர் அழைத்துச் சென்று எச்சரிக்கையின் பின்னர் விடுவித்ததாகத் தெரியவந்துள்ளது.

(உ-110)

# சிற்றி ஒவ் றிங்கோ கப்பலில் குழந்தை பிரசவம்

(கொழும்பு)

காங்கேசன் துறையிலிருந்து திருகோணமலை துறைமுகத்திற்கு நேற்றுமுன்தினம் புறப்பட்ட சிற்றி ஒவ் றிங்கோ கப்பலில் நெடுந்தீவைச்சேர்த பெண் ஒருவர்ஆண் குழந்தை ஒன்றைப் பிரசவித்துள்ளார்.

இந்தக் கப்பல் நேற்றுக் காலை திருமலைத் துறைமுகத்தை அண்மித்த வேளை குழந்தைப் பிரசவம் இடம்பெற்றதும் உடனடியாக கப்பல் அதிகாரிகள் துறைமுக அதிகார சபையின் அம்புலன்ஸ் வண்டி மூலம் தாயையும் குழந்தையையும் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். (ந-5)

## விளக்கக் கூட்டம்

(உடுவில்)

யாழ்.மாவட்டத்தில் தரம் 6 இல் கற்கின்ற மொழியறிவில் பின்னடைவுள்ள மாணவர்க்கு தயாரிக்கப்பட்டவிசேட பாடத்திட்டம் பற்றி பாடசாலை அதிபர்களுக்கான விளக்கக்கூட்டம் இன்றுஐந்து வலயங்களிலும் நடைபெறவுள்ளது. (எ-129)

UNIVERSITY OF JAFFNA

**Placement Test in English -Faculty of Arts**

A Placement Test in English will be conducted at the University on 04-10-2001 Thursday for the New Entrants 2001/2002. at 10.00 am.

All the New Entrants of the Faculty of Arts are requested to sit the examination without fail.

Registrar.

[C-2657]

## கல்விடிப்ளோமா விண்ணப்பம்கோரல்

தேசிய கல்வி நிறுவனத்தினால் வார இறுதி நாட்களில் நடத்தப்படும் பட்டப்பின் கல்விடிப்ளோமா 2002/2003 கல்வி ஆண்டுக்குஅனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது:

இக் கற்கை நெறி வார இறுதி நாட்களிலும், பாடசாலை விடுமுறைக் காலங்களிலும் யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் நடத்த ஏற்பாடாகியுள்ளது: (ந-4)

**விமான---**

பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் I C.A O அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை சமாளிக்க கூடியவகையில் தற்போதைய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லையென விமான நிலையத்தில் பாதுகாப்பு பற்றிய மதிப்பீடு ஒன்றைமேற்கொண்ட ICAO அமைப்பின் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்; (இ)

## துப்பாக்கிச் சூட்டில் சிறுவன் காயம்

[மட்டக்களப்பு]

வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவனொருவன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்:

இச்சம்பவம் மட்டக்களப்பு காத்தான்குடியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த ஏழுவயதுச் சிறுவன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்: [இ]

**அரசு..**

வத்த. மகிந்த ராஜபக்ஷ, நிமால் சிறியாலடிசில்வா, பிரதி அமைச்சர் மங்களசமரவீர ஆகியோருக்குத் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே தற்போது நடைபெற்றுவரும் யுத்தத்திற்கு முடிவு கட்ட வேண்டும் இதற்குவிடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தைநடத்த வேண்டும்.

இப் பேச்சுவார்த்தையின் மூலம் அரசும், புலிகளும் ஒரு இணக்கப் பாட்டுக்கு வரமுடியுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடம் நம்புகிறது.

சர்வகட்சிஅரசாங்கம் ஒன்று அமைப்பது தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சிக்கும் அரசுக்குமிடையே கடந்த காலங்களில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது இது சம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் பொதுஜனஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் 20வது சரத்து சமாதானப் பேச்சை தடைசெய்துள்ளது:

அத்துடன் பொதுஜனஐக்கிய முன்னணியும் ஐக்கியதேசியக் கட்சியும் 1997ம்ஆண்டு ஏப்பிரல் 2ம் திகதி செய்து கொள்ளப்பட்ட "லியாம் பொக்கஸ்" உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளசில

**பஸீரை.**

பாராளுன்ற செயலாளர் நாயகத்திற்கு அறிவித்திருந்தார்.

இதனைஅடுத்து சேகுதாவுத்பஸீர் எம் பிஉயர்நீதிமன்றில் வழக்குதொடர்ந்தால் நீதிமன்ற நீதியசர்கள்ஏ-ஆ அமாது மெரிக்காரியாப்பா சி.வி விக்னேஸ்வரன முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோதே தேசிய ஐக்கியமுன்னணியில் இருந்து நீக்கியமை செல்லுபடியற்றது என்று தீர்ப்பளிக்கப்பட்டது (வ)

**அமைச்சரவை...**

களின் கடனை ரத்துச் செய்தல் போன்ற விடயங்கள் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளன.

இதேவேளை இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பல அமைச்சர்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக கூட்டம் நடை பெற்ற போது சபையிலிருந்து வெளியேறியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# ஓ. எல் - ஏ. எல் பரீட்சை முறைகளில் மாற்றம்

## பரீட்சைஆணையாளர் தகவல்

(கொழும்பு)

பரீட்சைத் திணைக்களத்தின் பொன் விழாவை ஒட்டி புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் க.பொ.த சாதாரண தர.உயர்தரப் பரீட்சை முறைகளில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ.எம்.ஆர்.பி: அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

பரீட்சைத் திணைக்களத்தின் பொன்விழா நாளை மறுதினம் நடைபெற விருப்பதை அடுத்து பத்திரிகையாளர் மகாநாடொன்றை பரீட்சை ஆணையாளர் நடத்தியிருந்தார்;

அப்பத்திரிகையாளர் மகாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

பரீட்சைத் திணைக்களத்தின் பொன் விழாவை ஒட்டி பரீட்சைகள் தொடர்பான நூதனசாலை ஒன்றும், தகவல் தொழில் நுட்பப் பிரிவு ஒன்றும், வெப்தளம் ஒன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதில் முதல் முறையாக 5 ம் தர, புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நாளை மறுதினம் வெப்தளத்தில் வெளியிடப்படவுள்ளது.

புதிய கல்வித் திருத்தங்களின் படி 2002ம் ஆண்டு உயர்தரப் பரீட்சை ஏப்ரல் 1ம் திகதி ஆரம்பமாகி இரண்டுகட்டங்களாக நடைபெறவுள்ளது; இதன் மூலம் செப்ரெம்பர், ஒக்டோபர் மாதங்களில் பல்கலைக்கழகங்களில் மாணவர்களை அனுமதிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவித்தார். [வ]

**பாக்கியநாதன்---**

இவரது இடத்துக்கு எஸ். சந்திரமோகன் தொழிற்படு இயக்குநராக நியமனம் பெற்றுள்ளதுடன். இவரே தலைவராகவும் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

விடயங்கள் மீறப்பட்டுள்ளதாகவும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்டதலைவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் முக்கியஅமைச்சர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் கொழும்பு அரசியல் வட்டாரங்களிலும் தமிழ்க் கட்சிவட்டாரங்களிலும்பரபரப்பினை ஏற்படுத்தியிருப்பதுடன் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கருதப்படுகிறது; (வ-5)

## ஷெல் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களை நோக்கி நேற்றுமுன்தினம் இரவு11 30மணிமுதல் 12.00மணிவரை கடுமையானஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இ.

**டாக்டர்**

துப் பொருட்கள் மருந்துகள் வைத்திய சாலையில் தட்டுப்பாடாகவுள்ள பிரசவப் பிரிவுக்குரிய கையுறைகள் மற்றும் 300பாடசாலை மாணவர்களுக்குரிய உடுதுணிகள்பாடசாலைஉபகரணங்கள் என்பவற்றை எடுத்துச்செல்வதாக கூறினார்.

இதேவேளை கடந்தமே மாதம் ஜயலத் எம்.பிவன்னிக்கு சென்றிருந்தார் அப்போதுஜயலத்எம்பியின் வன்னிப்பயணம் விடுதலைப்புலிகளுக்கு உதவுவதற்காகவே எனஆளும் தரப்பினரால் விமர்சனம் எழுப்பப்பட்டமை தெரிந்ததே. (இ-4)

**தரிசனம் கருத்தரங்கு**

கருத்து: "வேலைத்தள அழுத்தங்களும் அவற்றை எதிர்கொள்ளலும் - II"

வழங்குபவர்: வைத்திய கலாநிதி இ. சிவசங்கர்

இடம்: நல்லூர் பிரதேச சபை கொக்குவில் பொது நூலக கேட்போர் கூடம் (கொக்குவில் மருந்தகம் அருகில்)

காலம்: நாளை(30-09-2001) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணி (பு.நே)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- தரிசனம்.

விளம்பர அன்பளிப்பு:

**வினோ நகைப்பூங்கா**

தங்க - வைர நகை வியாபாரம்

185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T. P. 2824

(கி-2658)

**31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

**அமரர் கந்தர் விசுவநாதர்**

(புலோப்பளை கிராமசபை முன்னாள் உறுப்பினர்)

30-08-2001 இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கந்தர் விசுவநாதர் அவர்களின் வீட்டுக் கிருத்தியம் இன்று சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இத்தருணத்தில் அன்னாரின் மரணச் செய்தியை கேள்வியுற்று எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்கள், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், மலர் வளையம் வைத்தவர்கள், துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்கள், மற்றும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன்;

இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

16/5 சீனியர்லேன்,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

(கி-2659)

**மின் பாவனையாளர்களே!**

★ 'சக்தி சேமிப்பு' மின்குமிழை பாவியுங்கள் !

★ 80 வீத மின் கட்டணத்தை மீதப்படுத்துங்கள்!!

★ மின் பற்றாக்குறையை நீக்க உதவுங்கள்!!

JAFFNA TECHNICAL INSTITUTE

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.